முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்
O.S. No. 519/2021

<u>வா.சா.1 / திரு. முரளிகிருஷ்ணன் / 08.11.2024.</u>

<u>3 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கை தாக்கல் செய்ய அதிகாரம் வழங்கியதற்கான இயக்குனர்களின் தீர்மானம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். யாரெல்லாம் வாதி நிறுவனத்தின் இயக்குனர்கள் என்பதற்கு பட்டியல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி நிறுவனத்தின் Articles of Association அல்லது Memorandum of Association தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தான் வாதி நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பா எனக்கு முன்பு வாதி நிறுவனத்தின் நிர்வாக இயக்குனராக இருந்து வந்தார். அவ்வாறு இருந்து வந்த நிலையில் வாதி நிறுவனத்திற்கும், 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்குமிடையே பரிவர்த்தனை இருந்தது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கிரையப் பத்திரத்தில் சம்மந்தப்பட்ட பரிவர்த்தனை தவிர வேறு எதுவும் கிடையாது. இதற்கு முன்பு மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பேராணை மனு எண் 15492/2019 மற்றும் பேராணை மேல்முறையீடு எண்.464/2020 ஆகியவற்றில் இவ்வழக்கில் கண்டுள்ள 2 மற்றும் 3 பிரதிவாதிகளை தரப்பினராக நான் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் 2 வது பிரதிவாதியான துரைசாமி அதில் தரப்பினர் தான். மேற்படி நீதி பேராணை மற்றும் பேராணை மேல்முறையீட்டில் வழங்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் வாதி நிறுவனம் இந்நீதிமன்றத்தை அணுகி இவ்வழக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். தற்போது வாதி நிறுவனம் இயங்குவதில்லை என்றால் சரிதான். 24.03.2023 ம் தேதியில் 1ம் பிரதிவாதியான வங்கி தன்னிடம் இருந்த 2ம் பிரதிவாதியான துரைசாமி தனிப்பட்ட முறையில் வைத்திருந்த நிரந்தர வைப்பீடான ரூ.30,00,000/- த்தை திருப்பூர் மாநகராட்சி வேண்டுகோளின் பேரில் ரத்து செய்து வாதி நிறுவனம் செலுத்த வேண்டியிருந்த நிலுவை வரித் தொகைக்காக செலுத்தப்பட்டது என்றும் அது போக வரி பாக்கி ரூ.20,00,000/- உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட விபரங்கள் எனக்கு தெரியும் என்றும் தற்போது இவ்வழக்கிற்காக அவ்வாறு தெரியாது என்று உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு அதிகாரம் வழங்கப்படாத

நிலையில் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. காரணம் நான் நிர்வாக இயக்குனர் என்பதால் எனக்கு அதிகாரம் உள்ளது. வாதி நிறுவனம் ஏற்கனவே நொடிந்து போய் இயங்காமல் உள்ளதால் அதன் சார்பாக நான் இவ்வழக்கை தாக்கல் செய்ய சட்டப்படி உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. தற்போதும் அலுவலகம் அங்கு இயங்கி வருகிறது. ஆனால் அவ்வாறு சொல்வதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாவில் கேட்கக்கூடிய நிரந்தர வைப்பீடு தொகையான ரூ.30,00,000/– தற்போது திருப்பூர் மாநகராட்சிக்காக வரி பாக்கிக்காக செலுத்தப்பட்டுவிட்டதால் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. சட்ட விரோதமாக லாபம் அடைய வேண்டி கெட்ட எண்ணத்துடன் இவ்வழக்கு உண்மையை மறைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவாவிற்கு வழக்கு மூலம் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. மேற்கண்ட காரணத்திற்காக வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை இல்லை.</u>

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN
Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2024.11.08 20:24:55 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.